**கூடுதல் மகளிர் நீதிமன்றம் (நீ.ந.நிலை), தேனி.**

**முன்னிலை : செல்வி. D. ஜெயபாரதி, L.L.M.,**

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம் (நீ.ந.நிலை), தேனி.

2057 திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 16-ம் நாள்

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 30-ம் நாள் திங்கள் கிழமை

# C.C. No. 295/2024

CNR No.TNTH02-007-286-2024

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆண்டு பட்டிகை வழக்கு எண் | : | 295/2024 |
| 2. | வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட எண் | : | TNTH02-007-286-2024 |
| 3. | குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>தேனி காவல்நிலையம்,<br>தேனி. |
| 4. | குற்ற எண் மற்றும் இதச பிரிவுகள் | : | Cr.No.219/2024; U/s. 294(b), 323, 506(i) IPC & Sec. 4 of TNPHW Act |
| 5. | குற்றம் சாட்டப்பட்டவர்கள் பெயர், வயது, தந்தைப்பெயர் மற்றும் முகவரி. | : | ராமமூர்த்தி, 67/24, த.பெ.நாராயணசாமி, ஸ்ரீராம் நகர், தேனி. |
| 6. | சம்பவ தேதி | : | 14.05.2024 |
| 7. | புகார் அளிக்கப்பட்ட தேதி | : | 30.05.2024 |
| 8. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | முன் பிணை பெற்றுச் சென்றுவிட்டதால் கைது செய்யப்படவில்லை. |
| 9. | எதிரி பிணையில் சென்ற நாள் | : | 18.07.2024 ( முன் பிணை) |

JAYABHARATHI DURAI

Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.02 01:19:24 +0530

| | | | |
|---|---|---|---|
| 10. | எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரி மீது 294(b), 323, 506(i) IPC and 4 of TNPHW Act ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது. |
| 11. | எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரி மீது 294(b), 323, 506(i) IPC and 4 of TNPHW Act–ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது. |
| 12. | எதிரியின் பதில் | : | குற்றவாளி இல்லை |
| 13. | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | : | 19.10.2024 |
| 14. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | : | 12.03.2026 |
| 15. | தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : | 30.03.2026 |
| 16. | நீதிமன்றத்தின் தீர்மானம் | : | எதிரி மீதான 294(b), 323, 506(i) IPC and 4 of TNPHW Act–ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருகிறது. |
| 17. | தீர்ப்பும் தண்டனையும் | : | முடிவில், எதிரி மீதான 294(b), 323, 506(i) IPC and 4 of TNPHW Act ன் படியான குற்றச்சாட்டுகளைப் பொறுத்தும் எதிரி குற்றவாளி இல்லை எனத் தீர்மானித்து கு.வி.மு.ச 248(1) பிரிவின் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது . |
| 18. | தீர்ப்பின் நகல் எதிரிகளுக்கு வழங்கப்பட்ட நாள் | : | இல்லை |
| 19. | காலதாமதத்திற்கான காரணம் | : | இல்லை |

JAYABHARATHI DURAI

Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.02 01:19:35 +0530

இவ்வழக்கானது 27.09.2024–ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M.உதயசூரியன் அவர்கள் ஆஜராகியும், சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இறுதியாக இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த, இந்த வழக்கில், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

## <u>தீர்ப்புரை</u>

### 1) <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u>

இவ்வழக்கின் வாதியும் அவரது மகளான கமலாவும் தேனி ஸ்ரீராம் நகரில் குடியிருந்து வருவதாகவும், வாதி அவரது மகளை தனது தம்பியும் இவ்வழக்கின் எதிரியுமான ராமமூர்த்திக்கு திருமணம் செய்து கொடுத்து ஒரு வருடம் ஆகிறது என்றும், வாதியின் மகளும் எதிரியும் பிரிந்து வாழ்வதாகவும், வாதியும், வாதியின் மகளும் கீழ் வீட்டிலும், எதிரி மேல் வீட்டிலும் குடியிருந்து வருகிறார்கள் என்றும், இவர்களுக்குள் அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டு வந்த நிலையில், கடந்த 14.05.2024–ம் தேதி காலை 7.00 மணிக்கு எதிரியின் வீட்டிலிருந்த வாஷிங் மெஷினை வாதியும் அவரது மகளும் கீழ் வீட்டிற்கு எடுத்து வரும்போது அதைப் பார்த்த எதிரி ஏண்டி தேவடியாள்களா ஏன் வீட்டில் உள்ள பொருட்களை எல்லாம் எடுத்துட்டு போங்கடி அவுசாரிகளா என்று அசிங்கமாகப் பேசி பெண்கள் என்றும் பாராமல் வாதியையும் அவரது மகள் கமலாவையும் கையால் மாறி மாறி அடித்து கேட்டை பிடித்து தள்ளியதில் வாதிக்கு இடது முழங்கையில் சிறு காயத்தையும், வாதியின் மகள் சாட்சி கமலாவுக்கு வலது கையில் சிறு காயத்தை ஏற்படுத்தியும், கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததன் காரணமாக எதிரி மீது 294(b), 323, 506(i) IPC and 4 of TNPHW Act–ன் கீழ் தேனி காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

JAYABHARATHI DURAI

Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.02 01:19:43 +0530

2) **<u>அழைப்பாணை சார்வு செய்தல், நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு பற்றி வினவுதல்:</u>**

குற்றமுறையீட்டாளர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட எதிரி மீதான இறுதி அறிக்கை நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக்கொண்ட பின் நீதிமன்றத்தின் அழைப்பாணையின் பேரில், எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானதும் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு எதிரி குற்றம் புரிந்திருப்பதற்கான முகாந்திரம் இருப்பதாக தோன்றியதால் எதிரி மீது 294(b), 323, 506(i) IPC and 4 of TNPHW Act–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் விளக்கி வினவிய போது எதிரி குற்றவாளி இல்லை என்றும், குற்றச்சாட்டை மறுத்து வழக்கு விசாரணை வேண்டினர்.

3) எதிரி குற்றத்தை மறுத்ததால் அரசுத்தரப்பில் சாட்சிகள் விசாரிக்க உத்தரவிடப்பட்டு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அரசு தரப்பில், அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும் உள்ளது.

4) கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிடுகையில், அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களின்படி எதிரி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதாக வாதிட்டார். கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதிடுகையில் இவ்வழக்கின் சம்பவம் 14.05.2026 அன்று நடந்ததாக சொல்லப்பட்டுள்ளதாகவும், வழக்கின் புகாரானது காலதாமதத்துடன் 30.05.2024–ம் தேதி காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், வழக்கின் அரசு தரப்பு சாட்சிகள் அ.சா.3, 4 ஆகியோர்கள் செவி வழி சாட்சிகள் என்றும், இவ்வழக்கின் புகார் யாரால் எழுதப்பட்டது என்பது குறித்து முரண்பாடு உள்ளதாகவும் இவ்வழக்கின் அ.சா.3, அ.சா.4, அ.சா.5 ஆகியோர்கள் அ.சா.1 நடத்தி வரும் பெட்ரோல் பங்கில் வேலை பார்த்து வருவதால் அவருக்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளார்கள் என்றும், இவ்வழக்கில் அ.சா.1 தனக்கு காயம் ஏற்பட்டதாக சொல்லியிருந்தாலும் அதற்கான மருத்துவ சான்றிதழ்கள் எதையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றும், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை

JAYABHARATHI DURAI
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.02 01:19:50 +0530

பதிவு செய்யப்பட்ட பிறகுதான் புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடம் சென்று விசாரணை செய்துள்ளதாகவம், அ.சா.2 நீதிமன்ற முதல் விசாரணையிலும், குறுக்கு விசாரணையிலும் முரண்பட்ட சங்கதிகளை கூறியுள்ளதாகவும், தனிப்பட்ட சாட்சிகள் யாரும் இந்த வழக்கில் விசாரிக்கப்படவில்லை என்றும், புலன் விசாரணை அதிகாரியும் அ.சா.1 மற்றும் அ.சா.2–க்கு காயம் எதுவும் இல்லை என்று குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளதாகவும், அ.சா.1–ன் செல்வாக்கினை பயன்படுத்தி எதிரி மீது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே, எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

5) <u>அரசுத்தரப்பின் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் புலனாகும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் :–</u>

(i) அ.சா.1–ம் புகார்தாரருமான இந்திரா தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரி தனது தம்பி என்றும், அ.சா..2 தனது மகள் என்றும், தனது தம்பியான எதிரிக்கு அ.சா.2–ஐ திருமணம் செய்து கொடுத்துள்ளதாகவும், 15.04.2024–ம் தேதி காலை 7.00 மணியளவில் எதிரியின் வீட்டிலிருந்த வாஷிங்மெஷினை எடுத்து வந்தபோது எதிரி இதை மட்டும் ஏன் எடுக்கிறீர்கள் அனைத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டியதுதானே என்றும், கேட்டை வேகமாகச் சாற்றியதில் தனக்கு இடது கையில் காயம் ஏற்பட்டது என்றும், சத்தம் கேட்டு வந்த தனது மகளுக்கும் வலது கையில் காயம் ஏற்பட்டது என்றும், அதன்பிறகு தேவடியா என்று அசிங்கமாகப் பேசி உங்கள் இருவரையும் கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறியதாகவும், அதன்பின்னர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும் அந்தப் புகார் அ.சா.ஆ.1 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(ii) அ.சா.2–ம், புகார்தாரரின் மகளுமான கமலா தனது சாட்சியத்தில் 14.05.2024–ம் தேதி காலை 6.45 மணியளவில் எதிரியின் வீட்டிலிருந்த வாஷிங் மெஷினை எடுத்து வந்தபோது எதிரி அ.சா.1, 2 – ஐ அசிங்கமாகப் பேசி கேட்டை வேகமாக சாற்றியதில் அ.சா.1–க்கு இடது கையிலும், தனக்கு வலது கையிலும் காயம் ஏற்பட்டது என்றும், எதிரி இதுபோன்று பல முறை பிரச்சனை செய்து வந்ததால் உயிருக்கு பயந்து காவல் நிலையத்தில் எதிரி மீது நடவடிக்கை எடுக்கும்படி 30.05.2024–ம் தேதியன்று மீண்டும் ஒரு புகார் கொடுத்தோம் என்று சாட்சியமளித்துள்ளார்.

JAYABHARATHI DURAI
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.02 01:19:57 +0530

(iii) அ.சா.3 தனது சாட்சியத்தில் அ.சா.2–ன் பெட்ரோல் பங்கில் தான் 8 வருடமாக வேலை பார்ப்பதாகவும், 14.05.2024–ம் தேதி அ.சா.1–ன் வீட்டிற்கு சென்று, எதிரி குடியிருக்கும் மாடியிலிருந்து வாஷிங் மெஷினை எடுத்துக்கொண்டு வரும்போது அனைத்து பொருட்களையும் எடுத்துக்கொள்ளுங்கள் என்று கூறினார் என்றும், நானும் கண்ணனும் வாஷிங் கீழே வைத்துவிட்டு சென்றபிறகு எதிரியும், அ.சா.2–ம் தனித்தனியே போன் செய்து வீட்டில் சண்டை நடக்கிறது வா என்று அழைத்ததாகவும், தான் சென்று பார்த்தபோது எதிரிக்கு சட்டை கிழிந்திருந்தது என்றும், அ.சா.1–க்கு இடது கையிலும், அ.சா.2–க்கு வலது கையிலும் காயம் இருந்தது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(iv) அ.சா.4 சரண்யா தனது சாட்சியத்தில் தான் அ.சா.1–ன் அலுவலகத்தில் பணிபுரிவதாகவும், தான் வழக்கம்போல் 14.05.2024–ம் தேதி காலை 9.00 மணிக்கு அலுவலகம் சென்றபோது அ.சா.1–ன் கையில் காயம் இருந்தது என்றும், வாஷிங்மெஷினை எடுத்தபோது தங்களுக்கும் எதிரிக்கும் பிரச்சனை வந்து காயம் ஏற்பட்டது என்று அ.சா.1 கூறியதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(v) அ.சா.6 மாயன், சார்பு ஆய்வாளர் தனது சாட்சியத்தில் தான் 30.05.2024–ம் தேதி 15.00 மணிக்கு தான் நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 கொடுத்த புகாரினைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் அ.சா.ஆ.3, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 தயார் செய்ததாகவும், சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், தான் பணி மாறுதல் பெற்று சென்றுவிட்டபடியால் வழக்கு கோப்பினை சார்பு ஆய்வாளர் ஜீவானந்தம் பார்வைக்கு வைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

(vi) அ.சா.7. ஜீவானந்தம் சார்பு ஆய்வாளர் தனது சாட்சியத்தில் அ.சா.6 பதிவு செய்த குற்ற எண்.219/2024 வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு எதிரியை தேடி வந்த நிலையில், எதிரி முன் பிணை பெற்றுவிட்டதால் எதிரியை கைது செய்யவில்லை என்றும், பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

JAYABHARATHI DURAI

Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.02 01:20:04 +0530

6) இவ்வழக்கின் அ.சா.1 முதல் 7 வரையிலான சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை பிரிவு 313(1)(ஆ) CRPC–ன் கீழ் எதிரியிடம் எடுத்துரைத்து வினவியபோது, எதிரி பொய் சாட்சியம் எனவும், தன் மீதான வழக்கு பொய் வழக்கு என்றும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உள்ளது என்றும் கூறியிருந்தாலும், பின்னிட்டு எதிரி தரப்பில் சாட்சிகள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

7) இரு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பதே ஆகும்.

8) <u>தீர்வு மற்றும் தீர்வுக்குரிய காரணங்கள்:</u>

**இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.**

இவ்வழக்கின் சம்பவமானது 14.05.2024 அன்று நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது. காவல் நிலையத்திற்கு 30.05.2024 அன்று தகவல் கிடைத்ததாக புகாரிலும், முதல் தகவல் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சம்பவத்திற்கும், புகார் கொடுக்கப்பட்டதற்குமான இடையிலான கால தாமதத்திற்கு புகாரிலும், குற்ற இறுதி அறிக்கையிலும் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அ.சா.1 தனது நீதிமன்ற விசாரணையில் சம்பவம் நடந்த தேதி என்ன என்று கேட்கப்பட்டபோது 15.04.2024 என்று சம்பவம் நடந்த தேதியை மாற்றி குறிப்பிட்டுள்ளார். மேலும், அன்றையதினமே புகார் கொடுக்கப்பட்டதாகவும் சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், இவ்வழக்கின் புகாரானது முதல் தகவல் அறிக்கையை பார்க்கும்போது 30.05.2024 அன்று கொடுக்கப்பட்டது என்பது தெரியவருகிறது. இவ்வழக்கில் காயமுற்றதாக சொல்லப்படும் மற்றொரு நபரான அ.சா.2 தனது சாட்சியத்தில் சம்பவம் நடந்த அன்றே காவல் நிலையத்தில் அ.சா.2 பெயரில் புகார் கொடுக்கப்பட்டதாகவும், குடும்ப பிரச்சனை என்பதால் சமாதானம் சென்றுவிடுங்கள் என்று கூறி காவல் நிலையத்தில் புகாரை ஏற்கவில்லை என்றும், 30.05.2024 அன்று மறுபடியும் இந்த வழக்கில் புகார் கொடுக்கப்பட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். ஆனால், இவ்வழக்கில் சம்பவம் நடந்த

JAYABHARATHI DURAI
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.02 01:20:11 +0530

அன்று கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் புகார் தொடர்பாக எந்த ஒரு ஆவணமும் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான மாயன் என்பவர் நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்தில் புகார் கொடுப்பதில் ஏற்பட்ட காலதாமதம் தொடர்பாக எந்த சங்கதிகளும் இந்த வழக்கில் குறிப்பிடவில்லை என்று கூறி சாட்சியமளித்துள்ளார். எனவே, மேற்படி சம்பவம் நடந்ததற்கும், புகார் கொடுத்ததற்கும் இடையிலான கால தாமதம் தொடர்பான காரணம் ஏற்கத்தக்க வகையில் விளக்கப்படாததால் மேற்படி புகாரில் ஏற்பட்ட காலதாமதம் அரசு தரப்பு வழக்கினை பாதிப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது,

**9)** இவ்வழக்கில் அ.சா.1 கொடுத்த புகாரில் 14.05.2024 அன்று காலை 7.00 மணிக்கு எதிரி மேல் மாடியில் இருந்து வாஷிங் மெஷினை எடுத்து போகச் சொன்னதாகவும், அதனால் அ.சா.1–ம் அவரது மகளான அ.சா.2 ஆகியோர் வாஷிங் மெஷினை எடுத்துக்கொண்டு கீழே வரும்போது எதிரி அவர்களை பார்த்து அசிங்கமாகப் பேசி பிரச்சனை செய்ததாக குறிப்பிட்டுள்ளார். ஆனால், நீதிமன்ற விசாரணையில் முற்றிலும் இரு நபர்களை வழக்கில் சேர்த்து சிவா, கண்ணன் ஆகியோர் மூலம் வாஷிங் மெஷினை கீழே எடுத்து வந்ததாகவும், அதை அ.சா.1 சுத்தம் செய்து கொண்டிருந்தபோது எதிரி சண்டை போட்டு பிரச்சனை செய்ததாக சாட்சியமளித்துள்ளார். மேற்படி சிவா மற்றும் கண்ணன் ஆகியோர் இவ்வழக்கில் முறையே அ.சா.3 மற்றும் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.3 சிவா தனது நீதிமன்ற சாட்சியத்தில் ராமமூர்த்தியும் அ.சா.2–ம் தனித்தனியாக போன் செய்து வீட்டில் சண்டை நடக்கிறது வா என்று அழைத்தார்கள் என்றும், அவர் சம்பவ இடத்திற்கு ன்றபோது எதிரியின் சட்டை கிழிந்திருந்ததாகவும், அ.சா.1–க்கு இடது கையிலும், அ.சா.2–க்கு வலது கையிலும் காயம் இருந்ததாகவும் சொல்லியுள்ள சங்கதிகளை குறித்து பரிசீலிக்கையில் அ.சா.2 சிவா சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பதும் தெரியவருகிறது.

**10)** அதேபோல் அ.சா.4 அவரது நீதிமன்ற விசாரணையில் அ.சா.1–ன் கையில் ஏற்பட்டிருந்த காயம் குறித்து கேட்டபோது அ.சா.1–ன் வீட்டின் மாடியில் இருந்த வாஷிங் மெஷினை எடுத்து வந்தபோது, அ.சா.1, அ.சா.2 மற்றும் எதிரி ஆகியோருக்கிடையே பிரச்சனை ஏற்பட்டதாகவும், எதிரி அ.சா.1–ஐ அடிக்க

JAYABHARATHI DURAI
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.02 01:20:17 +0530

வந்ததாகவும், அ.சா.1–க்கு காயம் எற்பட்டதாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார். எனவே, மேற்படி அ.சா.4–ம் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பது தெரியவருகிறது. எனவே, அ.சா.4–ன் சாட்சியமும் ஏற்கத்தக்கதல்ல.

**11)** இவ்வழக்கில் அ.சா.1 தனது நீதிமன்ற விசாரணையில் வாஷிங் மெஷினை வீட்டு மாடியில் இருந்து கீழே எடுத்து வந்ததாக சொன்ன நபரான கண்ணன் என்பவர் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நீதிமன்ற விசாரணையில் ஒருநாள் அ.சா.1 கொடுத்த புகார் தொடர்பாக காவல் நிலையத்திற்கு அவரை வரச் சொன்னதாகவும் வழக்கு சம்பந்தமாக தனக்கு வேறு எதுவும் தெரியாது என்றும் கூறி பிறழ் சாட்சியாக மாறியுள்ளது அரசு தரப்பு வழக்கிற்கு பின்னடைவை ஏற்படுத்துகிறது.

**12)** எதிரி மீதான இதச 294(b) பிரிவின் கீழான குற்றத்தைப் பொறுத்து பரிசீலிக்கையில், அ.சா.1 தன்னுடைய புகாரில் வாஷிங் மெஷினை எடுத்துக்கொண்டு கீழே வரும்போது எதிரி அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரை பாரத்து என் வீட்டில் உள்ள பொருட்களை எல்லாம் எடுத்து போங்கடி என்றும் தேவடியா மகளே என்று சொல்லியும் அ.சா.1–ஐ திட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.1 தன்னுடைய நீதிமன்ற விசாரணையில், எதிரியால் தனக்கும் தனது மகளுக்கும் காயம் ஆனதாகவும், அதன்பிறகு தேவடியா என்று அசிங்கமாகப் பேசியும், நீ ஏன் இங்கு இருக்கிறாய் என்று சொல்லியும், உங்கள் இருவரையும் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும் சொல்லியுள்ளார்.

**13)** அ.சா.2 தன்னுடைய நீதிமன்ற விசாரணையிலும், சம்பவம் நடந்த நாளன்று எதிரி மாடியிலிருந்து கீழே இறங்கி வந்து எல்லா பொருட்களையும் எடுத்துக்கோங்கடி என்றும் தேவடியா மகளே என்றும் நிறைய அசிங்கமான வார்த்தைகளால் பேசியதாகவும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.2 குறுக்கு விசாரணையில், சம்பவத்தின்போது அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் வந்தார்களா என்றால் வீடு ரோட்டிற்குள் உள் தள்ளி இருந்ததால் யாரும் வரவில்லை. வாஷிங் மெஷினை எடுத்து வந்த நபர்கள் இருந்தபோது பிரச்சனை ஏற்பட்டதா ? அல்லது எடுத்து வந்த நபர்கள் சென்றபின் நடந்ததா ? என்றால் அவர்கள் சென்றபிறகு நடைபெற்றது என்றும் சொல்லியுள்ளார். மேற்படி சங்கதிகளை பரிசீலிக்கும்போது இச்சம்பவமானது பொது இடத்தில்

JAYABHARATHI DURAI

Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.02 01:20:24 +0530

நடைபெறவில்லை என்பது தெரியவருகிறது. இதச 294(பி) பிரிவின் கீழ் ஒருவர் தண்டிக்கப்படுவதற்கு சம்பவமானது பொது இடத்தில் நடைபெற்று அதனால் பிறருக்கு அருவருப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால், இவ்வழக்கில் சம்பவம் பொது இடத்தில் நடக்கவில்லை என்பதால் இதச 294(பி) பிரிவின் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**14)** எதிரி மீதான இதச 323 பிரிவின் கீழான குற்றத்தைப் பொறுத்து பரிசீலிக்கையில் இவ்வழக்கின் புகாரில் எதிரி அ.சா.1 மற்றும் அ.சா.2–ஐ அசிங்கமாகப் பேசி கையால் மாறி மாறி அடித்ததாகவும், அதன்பிறகு கேட்டை பிடித்து அறைந்து தள்ளியதில் அ.சா.1–ன் இடது கை , முழங்கையில் ரத்தக்காயம் ஏற்பட்டது என்றும் தனது மகளான அ.சா.2–க்கு வலது கையில் ரத்தக் காயம் ஏற்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அ.சா.1 நீதிமன்ற முதல் விசாரணையில் எதிரி அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரை கையால் மாறி மாறி அடித்ததாக எந்த சங்கதியும் கூறவில்லை. அ.சா.1 வீட்டிற்குள் செல்லும்போது எதிரி வீட்டின் கேட்டை வேகமாக சாத்தியதாகவும் அதில் அ.சா.1–க்கு இடது கையில் காயம் ஏற்பட்டதாகவும் சத்தம் கேட்டு வந்த தனது மகளான அ.சா.2–க்கு வலது கையில் காயமானதாகவும் சொல்லியுள்ளார். அ.சா.1 தனது நீதிமன்ற குறுக்கு விசாரணையில், தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்ததாகவும் சொல்லியுள்ளார். ஆனால், மருத்துவமனை சென்று அ.சா.1 சிகிச்சை பெற்றதற்கான எந்த ஆவணங்கள் எதுவும் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

**15)** இவ்வழக்கில் காயம் பட்ட மற்றொரு நபரான அ.சா.2 தனது நீதிமன்ற முதல் விசாரணையில் தன்னையும் தனது அம்மாவானஅ.சா2–யும் எதிரி அடித்துவிட்டதாகவும், வீட்டிற்குள் செல்ல முயன்றபோது திறந்திருந்த கேட்டை எதிரி வேகமாக சாத்தியதாகவும் அதனால் தனது அம்மாவிற்கு இடது கையிலும், தனக்கு வலது கையிலும் காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளார். அ.சா.2 குறுக்கு விசாரணையில் தனக்கும், தனது அம்மாவிற்கும் ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவமனை சென்று சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்று கூறியுள்ளார். மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் சாட்சியத்தில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை வைத்து பார்க்கும்போது உண்மையில் எதிரி சம்பவத்தன்று அ.சா.1–க்கும், அ.சா.2–க்கும் காயங்களை

JAYABHARATHI DURAI
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.02 01:20:30 +0530

ஏற்படுத்தினாரா என்பது குறித்து சந்தேகம் எழுகிறது. எனவே, எதிரி மீதான இதச 323 பிரிவின் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**16)** எதிரி மீதான இதச 506(i) பிரிவின் கீழான குற்றத்தைப் பொறுத்து பரிசீலிக்கையில், இவ்வழக்கின் புகாரில் எதிரி அ.சா.1 மற்றும் அ.சா.2–ஐ பார்த்து உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் நீதிமன்ற முதல் விசாரணையில் எதிரி கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிச் சென்றதாக கூறியுள்ளார். ஆனால், இவ்வழக்கில் பாதிக்கப்பட்டதாக கூறப்படும் மற்றொரு நபரான அ.சா.2 நீதிமன்ற சாட்சியத்தில் எதிரி கொலை மிரட்டல் விடுத்தது குறித்து எந்தவொரு சங்கதியும் கூறவில்லை. எனவே, எதிரி உண்மையில் அ.சா.1 மற்றும் அ.சா.2–க்கு கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், அதனால் மேற்படி இருவருக்கும் உடனடி உயிர் பயத்தை ஏற்படுத்தினார் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**17)** எதிரி மீதான Sec.4 of TNPHW Act பிரிவின் கீழான குற்றத்தைப் பொறுத்து பரிசீலிக்கையில். மேற்படி பிரிவின் கீழ் தண்டிக்கப்படுவதற்கு சம்பவமானது பொது இடத்தில் நடைபெற்றிருக்க வேண்டும்.

4. Penalty for harassment of women.—

> “ Whoever commits or participates in or abets harassment of women in or within the precincts of any educational institution, temple or other place of worship, bus stop, road, railway station, cinema theatre, park, beach, place of festival, public service vehicle or vessel or any other place shall be punished with imprisonment for a term which may extend to three years and with fine which shall not be less than ten thousand rupees.”

**18)** மேற்படி சட்டப்பிரிவினை உற்றுநோக்கும்போது சம்பவமானது எந்த இடத்தில் நடைபெற்றிருந்தாலும் இப்பிரிவின் கீழ் தண்டிக்கப்படலாம் என்று தோன்றினாலும் மேற்படி சட்டப்பிரிவின் கீழ் ஒருவர் தண்டிக்கப்படுவதற்கு

JAYABHARATHI DURAI
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.02 01:20:36 +0530

சம்பவமானது பொது இடத்தில் நடைபெற்றிருக்க வேண்டும் என்பது பல்வேறு முன்தீர்ப்புகள் முலம் நிலைநிறுத்தப்பட்ட சட்ட விதியாகும். சில பொருத்தமான பகுதிகள் கீழ்வருமாறு,

in Anbazhagan v. State represented by Inspector of Police, Pallikaranai Police Station, Kancheepuram District [CDJ 2012 MHC 2168].

> " 7. To attract offence under Section 4 of Tamil Nadu Prohibition of Harassment of Woman Act, 1998 offence must have taken place at a place particularly covered by Section. A private dwelling house is not one of such places Section 4 of Tamil Nadu Prohibition of Harassment of Woman Act,1998 reads as follows:
>
> " 4. Penalty of (harassment of woman) - whoever commits or participates in or abets (harassment of woman) in or within the precincts of any educational institution, temple or other place of worship, bus stop, road, railway station, cinema theatre, park, beach, place of festival, public service vehicle or vessel or any other place shall be punished with imprisonment for a term which may extend to three years and with fine which shall not be less than thousand rupees. "
>
> . This Court by its order dated 25.10.2010 in Crl.O.P No.13501 of 2010 in Gouresh Mehra v. The State Rep. by Tr has held as follows:

> " This Court is of the considered opinion that the words "any other place " found in Section 4 are to be read "ejusdem generis".

19) இவ்வழக்கிலும் சம்பவம் நடந்த இடத்தினை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள மாதிரி வரைபடத்தினை பார்வையிடும்போது சம்பவ இடமானது சாலைக்கு உட்புறமாக தள்ளி அமைந்துள்ளது. மேலும், அ.சா.2 குறுக்கு விசாரணையில், சம்பவத்தின்போது அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் வந்தார்களா என்றால் வீடு ரோட்டிற்குள் உள் தள்ளி இருந்ததால் யாரும் வரவில்லை. வாஷிங் மெஷினை எடுத்து வந்த நபர்கள் இருந்தபோது பிரச்சனை ஏற்பட்டதா ? அல்லது எடுத்து வந்த நபர்கள் சென்றபின் நடந்ததா ? என்றால் அவர்கள் சென்றபிறகு நடைபெற்றது என்றும் சொல்லியுள்ளார். மேற்படி சங்கதிகளை பரிசீலிக்கும்போது இச்சம்பவமானது பொது இடத்தில் நடைபெறவில்லை என்பது தெரியவருகிறது.

JAYABHARATHI DURAI
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.02 01:20:42 +0530

எனவே, மேற்படி எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**20)** இறுதியாக அரசு தரப்பில் எதிரி மீதான 294(b), 323, 506(i) IPC and 4 of TNPHW Act பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து எதிரி மீதான 294(b), 323, 506(i) IPC and 4 of TNPHW Act பிரிவுகளின் படியான குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரியை விடுவித்து எதிரி குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து கு.வி.மு.ச. 248(1) பிரிவின் கீழ் எதிரியை விடுதலை செய்தும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**21)** இந்த வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்துள்ளார். எனவே எதிரி மீதான பிணைமுறி பத்திரம் இவ்வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் அல்லது மேல்முறையீடு எதுவும் நிலுவையில் இருப்பின் அது முடிந்த பின்னர் ரத்து செய்யப்பட வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

**22)** இவ்வழக்கில் வழக்கு சொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே சொத்துக்கள் பற்றிய தனிப்பட்ட உத்தரவு எதுவும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 30–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

JAYABHARATHI DURAI
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.02 01:20:50 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
தேனி.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள்:</u>**

1. அ.சா.1 – திருமதி. இந்திரா புகார்தாரர்.
2. அ.சா.2 – திருமதி.கமலா
3. அ.சா.3 – திரு.சிவா

4 அ.சா.4 – திருமதி.சரண்யா

5 அ.சா.5 – திரு.கண்ணன்

6 அ.சா.6 – திரு.மாயன் சார்பு ஆய்வாளர்

7 அ.சா.7 – திரு. ஜீவானந்தம் சார்பு ஆய்வாளர்

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:**

1. அ.சா.ஆ.1 – புகார் மனு
2. அ.சா.ஆ.2 – பார்வை மகஜரில் உள்ள அ.சா.5–ன் கையொப்பம்
3. அ.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை
4. அ.சா.ஆ.4 – பார்வை மகஜர்
5. அ.சா.ஆ.5 – மாதிரி வரைபடம்

**அரசுத் தரப்பு சான்று பொருள் :** இல்லை.

**எதிரிகள் தரப்பு சாட்சி :** இல்லை.

**எதிரிகள் தரப்பு சான்றாவணம் :** இல்லை

JAYABHARATHI DURAI
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.04.02 01:20:57 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
தேனி.

**குறிப்பு :**

வழக்கின் முடிவு காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.

எந்த சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையிலிருந்தார்.

இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.